ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய: ஸ்ரீமத் வரவரமுநயே நம:
ஸ்ரீமத் வரத குரவே நம:

# திருக்கோட்டியூர் நம்பி – வருஷதிருட்சத்திரம் - வைகாசி - ரோகிணி



ஸ்ரீசௌம்யநாராயணப்பெருமாள்



திருக்கோட்டியூர் நம்பி – புகைப்படங்கள் உதவி - ஸ்ரீ TKR வேம்பு ஸ்வாமி

## தனியன்

வைஸாக ரோஹிண்யுதிதம் கோஷ்டீபூர்ணம் ஸமாஸ்ரயே /
சரமஸ்லோக தாத்பர்யம் யதிராஜாய யோSவதத் //

ஸ்ரீவல்லப பதாம்போஜ தீபகத்யம்ருத ஸாகரம் /
ஸ்ரீமத் கோஷ்டீபுரீ பூர்ணம் தேஸிகேந்தரம் பஜாமஹே //

## வாழித்திருநாமம்

மன்னியசீராளவந்தார் மலர்ப்பதத்தோன் வாழியே
வைகாசி ரோகிணி நாள் வந்துதித்தோன் வாழியே
இன்னிளவஞ்சிக்கு இனிதுரைத்தான் வாழியே
எம்பெருமானாரெனும் பேரியம்புமவன் வாழியே
தென்னணியாம் காசிபகோத்திரத்துதித்தோன் வாழியே
திருக்குருகைப்பிரான்னெனும்பேர் திகழவந்தோன் வாழியே
முன்னரரும் (முன்னவரும்) பெரும்பூதூர் முனிக்குரைத்தோன் வாழியே
மொழிந்த திருக்கோட்டிநம்பி மூதுலகில் வாழியே.

காசிபன் தன்கோத்திரத்தைக் கருதிவந்தோன் வாழியே
கலையனைத்தால் முன்னவர்க்குக் கதியளித்தோன் வாழியே
மாசறமெய்ப்பொருளெதிக்குவழங்குமவன் வாழியே
வையகமுன் தரிசனத்தால் வாழுமென்றான் வாழியே
ஏசறவேயுகந்தெதியை எடுத்தணைத்தான் வாழியே
எம்பெருமானாரெனும் பேரியம்புமவன் வாழியே
தேசுபுகழ்ச்செல்வன் மொழி தேர்ந்துரைப்போன் வாழியே
திருக்கோட்டிபூர்நம்பி சகதலத்தில் வாழியே.

ஈரேழுமூன்றொன்றில் இதமுரைத்தான் வாழியே
ஏற்றமாமளவந்தாரிணையடியோன் வாழியே
ஈரெழுவருக்கும் பரமபதம் ஈயுமவன் வாழியே
எம்பெருமானாரெனும் பேரியம்புமவன் வாழியே
நாலேழில் நாலாநாள் நாடிவந்தான் வாழியே
நம்மதுரகவிநிலையை நண்ணினான் வாழியே
நாலேழுநாலெழுத்தை நன்குரைத்தான் வாழியே
நங்கள் திருக்கோட்டிநம்பி நற்பதங்கள் வாழியே.

அல்பகலும் ஆளவந்தார் அடிநினைவோன் வாழியே
அனவரதம் தெற்காழ்வார்க்காட் செய்வோன் வாழியே
வெல்பொருள் வெளியிட, எதியை வெறுத்துகந்தான் வாழியே
மேதினியோருய்வரென்று மெச்சினான் வாழியே
உள்மந்திரமெதிரராசர்க்கொளித்துரைத்தான் வாழியே
உந்து மதகளிற்றனுபவத் தெதியை உகந்தணைத்தான் வாழியே
*செல்வநம்பிகுலம் தழைக்கச் செகத்துதித்தான் வாழியே
திருக்கோட்டியூர் நம்பி சகதலத்தில் வாழியே.

*இதிலிருந்து பெரியாழ்வார் காலத்தில் அவருக்குப் பரம ஆப்தராய், ஸ்ரீவல்லபதேவன் எனும் பாண்டிய அரசனுக்கு மந்திரியாயிருந்த செல்வநம்பியின் குலத்தில் உதித்தவர் திருக்கோட்டியூர் நம்பி என விளங்குகிறது.

அவதாரஸ்தலம் - திருக்கோஷ்டியூர்
திருநாமங்கள் - திருக்கோஷ்டியூர் நம்பி, கோஷ்டிபூர்ணர், கோஷ்டீபுரீஸர், குருகேசர்
திருக்குமாரர் - தெற்காழ்வான்
திருக்குமாரத்தி – தேவகிப்பிராட்டியார்
ஆசார்யர் - ஸ்ரீஆளவந்தார்
சிஷ்யர் - ஸ்ரீபாஷ்யகாரர்

## திருக்கோட்டியூர் நம்பி அருளியுள்ள பெரியதிருமொழி தனியன்

கலியாமி கலித்வம்ஸம் கவிம் லோகதிவாகரம் /
யஸ்ய கோபி: ப்ரகாஸாபி: ராவித்யம் நிஹதம் தம: //

## திருக்கோட்டியூர் திவ்யதேச சிறப்பும் நம்பிகளின் அவதரமகிமையும்

திருக்கோட்டியூர் என்கிற திவ்யதேசம் நாலாயிர திவ்யப்ரபந்தத்தில் முதலில் பெரியாழ்வாரால் மங்களாஸாஸனம் செய்யபட்ட திவ்யதேசம் ஆகும். (வண்ணமாடங்கள் சூழ் திருக்கோட்டியூர் - பெரியாழ்வார் திருமொழி முதல் பாசுரம்). திருக்கோட்டியூர் நம்பி நித்ய சூரிகளில் ஒருவரான `புண்டரீகர்' அம்சமாக வைகாசி மாதம் ரோகிணி நசஷத்திரத்தில் பெரியாழ்வாரின் அபிமாநத்துக்குரியவரான செல்வநம்பி வம்சத்தில் காச்யப கோத்ரத்தில் அவதரித்தார். இவருடைய திருநாமம் குருகேசர். இவருடன் அநுவ்ருத்தி ப்ரஸந்நரான ஆசார்யர்களின் பரம்பரை முடிந்தது. (அதாவது ஓரான் வழியாக விஷயத்தை தம் சிஷ்யர்களுக்கு சொல்லிக் கொடுத்தல்). இராமானுஜர் முதல் க்ருபாமாத்ர ப்ரஸந்நாசார்ய பரம்பரை துவங்கியது. (அதாவது இந்த ஸம்பரதாயத்தில் ஆசையுடையவர்கள் யாராகயிருந்தாலும் விஷயத்தை தம் ஆசாரியனிடத்தில் கேட்டு தெரிந்து கொள்ளுதல்). இவர் தன் மகன் தெற்காழ்வான் மற்றும் மகள் தேவகிப்பிராட்டியை எம்பெருமானார் திருவடிகளில் ஆச்ரயிக்கச் செய்தார். விரசுந்தரப்பிரஹ்மராயன் என்கிற சிற்றரசனின் தொல்லை காரணமாக பெரிய பட்டார் சில காலம் திருக்கோஷ்டியூரில் தங்கி இருந்தார். அவருக்கு ஊசா துனையாக நஞ்சீயரும் அங்கு எழுந்தருளி இருந்தார். அங்கு இருந்த காலத்தில் பட்டர் நம்பெருமாளின் பிரிவை ஆற்றிக்கொள்ளும் வண்ணம் அடியார்கள் வேண்ட ஆழ்வார்கள் விஷயமாக பூதம் ஸரஸ்ய என்கிற திவ்யப்ரபந்த பொது தனியனையும் ஆண்டாள் விஷயமாக நீளாதுங்க ஸ்தநகிரி என்று தொடங்கும் திருப்பாவை தனியனையும் அருளினார்.

## ஆளவந்தாரும் திருக்கோட்டியூர் நம்பியும்

ஆளவந்தாரின் முக்ய சிஷ்யர்களில் பெரிய நம்பிக்கு அடுத்தபடியாக திருக்கோட்டியூர் நம்பி மிகநெருக்கமாக இருந்தார். ஆளவந்தாரின் கடைசி காலத்தில் நோய்வாய் பட்டிருந்த பொழுது பெரியநம்பியும், திருக்கோட்டியூர் நம்பியும் அவருடனே பரமபதம் செல்ல சித்தமானார்கள். நம்பெருமாள் அருளினாலும், திருவரங்கப்பெருமாள் அரையர் வேண்டுகோளினாலும், இருவரும் தங்கள்முடிவை மாற்றிக்கொண்டு பூர்வாசார்யர்கள் கைங்கர்யத்தை தொடர இசைந்தார்கள். பின்னர் ஆளவந்தார் திருக்கோட்டியூர் நம்பியை அழைத்து

இராமானுஜருக்கு ரஹஸ்யார்த்தங்களை விளக்கி உபதேசிக்கும்படி கேட்டுக் கொண்டார். மேலும்தான் தினந்தோறும் மிகவும் ஆராதித்து வந்த பவிஷ்யதாசார்ய விக்ரஹத்தை இவரிடம் கொடுத்து `இம்மூர்த்திதான் அந்த இளையாழ்வார்' என்று சொன்னார்.

## எம்பெருமானார்க்கு திருமாலையாண்டானை அறிமுகப்படுத்துதால்

ஒருசமயம் திருக்கோட்டியூர் நம்பி திருவரங்கம் சென்றிருந்த பொழுது திருமாலையாண்டான் என்கிற ஆசார்யரை அழைத்துக்கொண்டு எம்பெருமானார் மடத்துக்கு எழுந்தருளினார். எம்பெருமானார் இருவருக்கும் தெண்டன் சமர்பித்து நின்றார். நம்பி திருமாலையாண்டானிடம் எம்பெருமானாருக்கு திருவாய்மொழியின் அர்த்த விசேஷங்களை கூறுமாறு கேட்டுக்கொண்டார். அதன்படி திருமாலையாண்டானும் எம்பெருமானாருக்கு திருவாய்மொழியின் அர்த்தங்களை கூறிவந்தார். ஒருசமயம் `அறியாக்காலத்துள்ளே அடிமைக்கண் அன்பு செய்வித்து அறியாமாமாயத்து (2ஆம் பத்து 3ஆம் திருவாய்மொழி 3ஆம் பாசுரம்) என்கிற பாசுரத்திற்கு திருமாலையாண்டான் ஒரு அர்த்தம் சொல்ல எம்பெருமானார் அது சரியில்லை என்று தெரிவித்து வேறு விதமாக அர்த்தம் சொல்லி அது தான் பொருத்தமானது என்றார். திருமாலையாண்டான் அதை ஏற்றுக்கொள்ளமால் அவருக்கு அர்த்தம் சொல்வதை நிறுத்திவிட்டார். இதை கேள்வியுற்ற திருக்கோட்டியூர்நம்பி திருவரங்கம் வந்து திருமாலையாண்டானை சந்தித்து எம்பெருமானார் சொல்லும் அர்த்தம் சரிதான் என்றும் அவ்விதமே ஆளவந்தாரும் அர்த்தம் சொல்லி வந்ததை தாம் கேட்டிருப்பதாகவும், ஆளவந்தாருக்கு தோன்றாத அர்த்தங்கள் எம்பெருமானாருக்கும் தோன்றாது என்று தெரிவித்தார். மேலும் எம்பெருமானார் ஆசார்யனிடம் அர்த்தம் கேட்பது கிருஷ்ணர் சாந்தீபனிடம் வேதாத்யயனம் பண்ணினது போன்றது என்று சொல்லி திருமாலையாண்டானை திருவாய்மொழியின் அர்த்த காலசேஷபத்தை மீண்டும் தொடங்கக் கேட்டுக் கொண்டார். அதன்படி அர்த்த காலசேஷபம் தொடர்ந்து நடைபெற்று முடிந்தது.

## கிடாம்பியாச்சானை எம்பெருமானாரிடம் தளிகை கைங்கர்யம் செய்ய நியமித்தல்

ஒரு சமயம் உடையவருக்கு ஒரு ஸ்ரீவைஷ்ணவர் உஞ்சவிருத்தி பிஷை சமர்பிக்கும் பொழுது உணவில் விஷத்தைக் கலந்து கொடுத்து கொல்ல நினைத்தார். பகவத் கிருபயால் உயிர் தப்பினார். பிறகு உடையவர் உபவாஸம் இருந்தார். இதைக்கேட்டு திருக்கோட்டியூர் நம்பி ஸ்ரீரங்கம் வந்து சேர்ந்தார். காவிரி ஆற்று மணலில் அவரை உடையவர் எதிர் கொண்டு அழைத்தார். கொதிக்கும் ஆற்று மணலில் நம்பியை ஸாஷ்டாங்கமாக விழுந்து சேவித்தார். நம்பி அவரை எழுந்திருக்கச் சொல்லவில்லை. அருகிலிருந்த கிடாம்பி ஆச்சான் இதைக்கண்டு பொறுக்காமல் `இது என்ன சிஷ்ய ஆசார்யக்ரமம்? விஷம் வைத்தவர் செயலை விட இது மிகக் கொடுமை' என்று நம்பியிடம் சொல்லி, உடையவருடைய திருமேனியை வாரி அணைத்துக் கொண்டார். இதை எதிர்பார்த்த நம்பி இவருடைய பரிவைக்கண்டு மெச்சி, இவரை உடையவருக்கு தளிகைக் கைங்கர்யம் செய்யும்படி நியமித்தார்.

## திருக்கோஷ்டியூர் நம்பி ஒரு தீர்க்கதரிசி

ஆளவந்தார் தம் சரமதசையில் இவரிடம் பவிஷ்யதாசார்ய விக்ரஹத்தை ப்ரஸாதித்து அது வந்த வழியையும் அருளிச்செய்து ரஹஸ்யார்த்தங்கள் அனைத்தையும் ஸ்ரீராமாநுஜருக்கு உபதேசிக்கும்படியும் நம்தர்ஸநத்தை அவர் திருநாமத்தாலே விளங்கு விக்கும்படியும் நியமித்துச் சென்றார்.

தமது ஆசாரியனின் நியமனத்தை பூர்த்தி செய்ய ராமாநுஜரை திருக்கோஷ்டியூருக்கு வரவழைத்து ரஹஸ்யார்த்த விசேஷங்களை எல்லாம் அருளினார்.

உடையவருக்கு எம்பெருமானார் என்ற திருநாமம் சார்த்தி அந்த பெயரிலேயே நம் தர்சனம் விளங்க வேண்டும் என்று நியமித்தார். திருமாலையாண்டானை இவருக்கு திருவாய்மொழி கால சேஷபம் செய்யச் செய்தார். சில கருத்து வேற்றுமை காரணமாக திருமாலையாண்டான் இவருக்கு காலசேஷபம் சொல்வதை நிறுத்தி விட்டார். இதை கேள்வியுற்ற நம்பி திருக்கோஷ்டி ஊரிலிருந்து உடனே புறப்பட்டு வந்து பிள்ளானிடம் ஆளவந்தாருக்கு தோன்றாத எவையும் இவருக்கும் தோன்றது என்று சொல்லி திருமாலையாண்டானை எம்பெருமானார் மடத்திற்கு அழைத்துச் சென்று மீண்டும் ஸ்ரீபாஷ்ய காலசேஷபத்தைச் சொல்லச்சொன்னார்.

ஒருசமயம் யாரோ ஒரு ஸ்ரீவைஷ்ணவர் எம்பெருமானாருக்கு பிட்சையில் விஷத்தைக் கலந்துகொடுத்து கொலை செய்ய முயற்சி செய்தார். அதனால் எம்பெருமானார் உபவாஸம் இருந்தார். இதைக் கேள்வியுற்ற திருக்கோஷ்டியூர் நம்பி உடனே புறப்பட்டு ஸ்ரீரங்கம் வந்து சேர்ந்தார். நம்பியை எதிர் கொண்டு அழைக்க எம்பொருமானார் காவிரி ஆற்றங்கரைக்குச் சென்று கொதிக்கும் மணலில் தண்டன் சமர்பித்தார். நம்பி வெகுநேரம் ஆகியும் எழுந்திருக்கச்சொல்லவில்லை. இதைக் கண்ட கிடாப்பியாச்சான் இதென்ன பரிட்சை என்று சொல்லி எம்பெருமானாரை வாரி அனைத்துக்கொண்டார். இதை எதிர் பார்த்த நம்பிகள் எம்பெருமானாரிடம் இனி நீர் கிடாம்பியாச்சான் பரிசோதித்த பிட்சைப் பிரசாதங்களை உட்கொள்ள வேண்டும் என்று சொல்லி கிடாம்பியாச்சானை இவருக்கு மடப்பள்ளி கைங்கர்யம் செய்யும்படி நியதித்தார்.

இவற்றிலிருந்து இவர் ஒரு பெரிய தீர்க்கதரிசி என்பதும், எம்பெருமானாரிடம் பொங்கும் பரிவை உடையவர் என்பதும், தமக்கு கெட்ட பெயர் ஏற்படுமானாலும் எம்பெருமானாருக்கு சிறப்பு விளைவிப்பதில் ஊன்றி நின்றவர் என்பதும், ஆளவந்தார் சிஷ்யர்களில் தலைமை பெற்றவர் என்பதும் விளங்கும். நம்பி தம் திருக்குமாரர் தெற்காழ்வானையும், மகள் தேவகிப்பிராட்டியையும் எம்பெருமானாரிடம் ஆஸ்ரயிக்கச் செய்தார்.

பின்பழகிய பெருமாள் ஜீயர் சேர்த்து அருளிய வார்த்தாமாலை - இதில் திருக்கோட்டியூர் நம்பி அருளிய சில வார்த்தைகளைக் கீழே அனுபவிப்போம்

## வார்த்தாமாலை 136 (f)

கைக்குழந்தைக்குத் தாய் முலைபோன்றிருப்பது நமக்கு த்வயம் என்று திருக்கோஷ்டியூர் நம்பி அருளிச்செய்வர்.

## 20ஆம் வார்த்தை - திருக்கோட்டியூர் நம்பி உடையவருக்கு அருளிச் செய்த வார்த்தை

ஒரு ஜீவன் எம்பெருமானை ஆச்ரயிக்க முடியாதபடி தடுக்கக்கூடிய விரோதிகள் ஆறு. அவையாவன :

1) <u>ஆஸ்ரயண விரோதி</u>

நான் எனது என்னும் அஹங்கார மமாகாரங்களும், ப்ராக்ருத பலங்களில் விருப்பமும், புருஷகாரமான பிராட்டியையும் ஆசார்யர்களையும் அவமதிப்பதும், பகவத்ப்ராப்தி கிடைக்குமோ கிடைக்காதோ என்னும் ஐயமும் ஒரு ஜீவனை எம்பெருமானை ஆச்ரயிப்பதில் இருந்து தடுத்துவிடும்.

2) <u>ஸ்ரவண விரோதி</u>

தன்னை மறந்து மற்ற தெய்வங்களைப் பற்றிய கதைகளைக் கேட்பது எம்பெருமானைப் பற்றிய பெருமைகளைக் கேட்பதைத் தடுத்துவிடும்.

3) <u>அநுபவ விரோதி</u>

சந்தனம் புஷ்பங்கள் முதலான போக த்ரவ்யங்களைத் துனை கொண்டு அநுபவிக்கப்படுவதாய், அநுபவித்தபின் சுத்தி ஏற்படுவதற்குக் குளிக்க வேண்டியிருக்கும். ஸ்த்ரீ புருஷ ஸம்போகம் (ஆண் பெண் கலவி), ப்ராக்ருத விஷயங்களில் பற்றை விளைப்பதன் மூலம் பகவத் அநுபவத்தை தடுத்துவிடும் என்று கருத்து.

4) <u>ஸ்வரூப விரோதி</u>

எம்பெருமானுக்கு அடிமை செய்து இருக்க இசையாமல் தன்னை ஸ்வதந்ரனாக நினைத்து அவன் ஆனையை மீறுவது பகவத் பாரதந்த்ர்ய மாகிற ஸ்வரூபத்தை ஜீவன் அறியாதபடி தடுத்துவிடும் என்று கருத்து.

5) <u>பரத்வ விரோதி</u>

ஜ்ஞான சக்திகளில் நம்மைக் காட்டிலும் சிறிது விஞ்சினவர்கள் இருந்தபோதிலும் ஜீவர்களேயான பிரமன், உருத்திரன் முதலான தெய்வங்களை சர்வேஸ்வரனாக மயங்குவது எம்பெருமானுடைய பரத்வத்தை அறியாதபடி தடுத்துவிடும் என்று கருத்து.

6) <u>ப்ராப்தி விரோதி</u>

எம்பெருமானை இனியனாக நினையாமல், தம்முடைய ப்ரக்ருதி சம்பந்தத்தைக் கழித்துத்தரும் பாவனனாக மாத்திரம் நினைக்கும் கைவல்ய நிஷ்டரோடு சேருவது, எம்பெருமானைப் பரம போக்யனாக நினைப்பவர்க்கே எளிதான பகவத் ப்ராப்தியைத் தடுத்துவிடும் என்று கருத்து.

ஆக நாம் இந்த 6 விரோதிகளையும் வெற்றி கொண்டால் எம்பெருமானை அடையாலாம்.

## 49ஆம் பார்த்தை - திருக்கோட்டியூர் நம்பி அருளிய வார்த்தை

ஜீவாத்ம ஸ்வரூபம் பொன்போலே குற்றமற்றது. தேஹ சம்பந்தத்தாலே அழுக்கேறிய பொன்போல் உள்ளது. பொன்னை அக்னியில் இட்டுப் பலகால் சூட்டால் அழுக்கு அகன்று உருவம் சிறுது ஆனாலும் ஒளி அதிகமாகிறது. அதுபோலவே ஜீவாத்மாவாகிற பொன் ரஹஸ்ய த்ரய ஜ்ஞானமாகிற அக்னியிலே இடப்பட்டால் தேஹசம்பந்தத்தால் ஏற்பட்ட அழுக்குகள் நீங்கி முக்தி தசையில் தர்மபூத ஜ்ஞானம் முழுமலர்ச்சி பெற்றவுடன் பிராட்டிமாருடன்:

1) அநந்யார்ஹசேஷத்வம்
2) அநந்ய சரணத்வம்
3) அநந்ய போக்யத்வம்
4) சம்ச்லேஷத்தில் (கூடினால்) தரிப்பது
5) விஸ்லேசஷத்தில் (பிரிந்தால்) தரியாமை
6) ததேக நிர்வாஹ்யத்வம் (எம்பெருமான் இட்ட வழக்காய் இருக்கை)

என்னும் 6 வகைகளில் ஜீவனுக்கு சாம்யமுண்டாகிறது.

## 94ஆம் வார்த்தை

திருக்கோட்டியூர் நம்பி அந்திம தசையில் இருந்தபோபோது முதலிகள் அவரிடம் உம்முடைய திருவுள்ளக் கருத்து எது? என்று கேட்க சக்ரவர்த்தித் திருமகனார் திருவுள்ளக் கருத்தை ஒரு பசஷி புண் படுத்திற்று என்றார்.

விவரணம்

ஸ்ரீராமாயணம் யுத்த காண்டம் 18வது சர்க்கம் - 24வது மற்றும் 25வது ஸ்லோகத்தில் உள்ள விஷயம் :

சக்கரவர்த்தித் திருமகன் - தன்னுடைய மணைவியைக் கவர்ந்து சென்ற வேடனுக்காகத் தன் உயிரை விட்டு அவனுக்கு விருந்தளித்த ஒரு புறாவின் கதையைச் சொல்லி இந்தப் புறாவைப் போலாவது நான் சரணாகத ரஷணம் செய்ய முடியாதே. நான் இந்த விபீஷணனை ரசஷித்தாலும் மணவியைக் கவர்ந்த இந்த வேடனுக்காக உயிரை விட்ட புறாவின் பெருமை எமக்கு ஏற்படாதே. என் உயிரையே விட்டு இராவணனை ரசஷித்தாலும் அப்பெருமை ஏற்படலாம். அப்படி ஏற்பட்டாலும் எனக்கு முன்னமே ஒரு புறா பெற்றுப்போன பெருமையையே நான் பெற்றேன் ஆவேன் என்று எம்பெருமான் திருவுள்ளம் புன்பட்ட வ்ருத்தாந்தத்தை நினைக்கிறது இவ்வார்ததை.

பின்குறிப்பு:
இதே வார்த்தையை அருளாளப்பெருமாள் எம்பெருமானார் அருளியதாக பெரியவாச்சான் பிள்ளை மேலே குறிப்பிட்ட ஸ்லோகங்களின் அபய ப்ரதான சாரத்திலும், நம்பிள்ளை திருவாய்மொழி 6-8-6 ஈட்டு வ்யாக்யானத்திலும் குறிப்பிட்டுள்ளார். திருக்கோட்டியூர் நம்பி, அருளாளப்பெருமாள் எம்பெருமானார் ஆகிய இருவருமே அந்திம காலத்தில் இப்படி அநுசந்தித்திருக்கலாம்.

## வார்த்தாமாலை 199ஆம் வார்த்தை

a)திருக்கோட்டியூர் நம்பி தம்முடைய தமையனார் அந்திம தசையில் எனக்குத் தஞ்சமேது? என்று கேட்க விரஜைக்கு இக்கரையில் உம்மை எங்கிருந்து வந்தீர் என்று கேட்பார்கள் ஆகில் திருக்கோட்டியூர் நம்பியின் ஸ்ரீபாதத்தில் நின்றும் வந்தோம் என்று சொல்லும்.

b) அக்கரையில் உம்மைக் கேட்பார்கள் ஆகில் திருக்கோட்டியூர் நம்பி தமையனார் என்று சொல்லும் என்று அருளிச்செய்தார்.

## இவ்வார்த்தையின் விளக்கம்

a)விளக்கம் - இந்த ஸம்ஸார மண்டலத்தில் திருக்கோஷ்டியூர் நம்பியின் ஸ்ரீபாதத்தை அடைந்தவன் என்று சொன்னால் யமன் முதலானார்கள் நலிய மாட்டார்கள் என்று கருத்து.

b) விளக்கம் - நித்ய விபூதியில் திருக்கோஷ்டியூர் நம்பிக்குத் தமயனார் என்று சொன்னால் லோக உத்தாரகரான எம்பெருமானாருடைய ஆசார்யருக்கும் தமையனாரா? என்று அங்குள்ளர் கொண்டாடுவர் என்று கருத்து.

## வார்த்தாமாலை 206ஆம் வார்த்தை

எம்பெருமானார் உந்துமதகளித்தன் என்கிற திருப்பாவை 18ஆம் பாட்டை அநுஸந்தித்துக்கொண்டு திருக்கோஷ்டியூர் நம்பியின் திருமாளிகை வாசலிலே நின்று கொண்டு சீரார்வளையொலிப்ப வந்து திறவாய் என்கிற இடத்தை அநுஸந்திக்கிறபோது நம்பி திருமகளார் தேவகிப்பிராட்டியார் திருக்கதவை திறந்து கொண்டு புறப்பட, அவளை எம்பெருமானார் தண்டனிட்டுக் கிடக்க, அவள் இதைக்கண்டு நெரித்துக் கொண்டு உள்ளே ஓடிப் புக, நம்பி இதுவென் பெண்ணே! என்று கேட்க, என்னை எம்பெருமானார் தண்டனிட்டார் என்று சொல்ல அதுக்கு பயப்படவேனுமோ? என்று அருளிச்செய்தார். எம்பெருமானார் உள்ளே எழுந்தருளின போது, நம்பி இளையாழ்வீர்! இப்போது அநுஸந்தாநம் செய்தது உந்துமதகளித்தன் தானே? என்று அருளிச்செய்தாரென்று, பிள்ளை அருளிச்செய்வர்.

## முக்கிய பின் குறிப்பு

திருப்பாவை 18ஆம் பாட்டு உந்துமதகளிற்றன் வ்யாக்யானத்தில் இறுதியில் உள்ள நம்பி திருமகளார் தேவகிப் பிராட்டியார் பற்றிய ஐதிகத்தின் விவரணம் இந்த வார்த்தையாகும். வடிவழகிய நம்பிதாஸரின் குருபரம்பராப்ரபாவம் முதலான மற்ற க்ரந்தங்களிலும் இந்நிகழ்ச்சி திருக்கோட்டியூர் நம்பி திருமாளிகையில் நடத்ததாகச் சொல்லியிருக்கிறார்கள். இவ்வைதிஹ்யத்தைப் பெரிய நம்பி திருமாளிகையில் அத்துழாய் விஷயமாக நடந்ததாக திருப்பாவை மூவாயிரப்படி அரும்பத உரைகாரர் எழுதியிருப்பது ப்ராமாணிகர்களால் ஆதரிக்கத்தக்கதன்று.

வார்தாமாலை 441 (h)

எம்பெருமானார் இருக்கும் இடமே ஊர் (உத்தேஸ்ய பூமி) என்பது திருக்கோஷ்டியூர் நம்பியின் திரு உள்ளம்.

நாயனாராச்சான் பிள்ளை அருளிய சரமோபாய நிர்ணயம் என்னும் நூலில் இருந்து எடுக்கப்பட்டது

ஆளவந்தார் தம்முடைய சரமதசையில் திருக்கோட்டியூர் நம்பியை அழைப்பித்து பவிஷ்யதாசார்யர் விக்ரஹத்தை ப்ரசாதித்து நடந்த வரலாற்றை அருளிச்செய்து மற்றும் உண்டான வ்ருத்தாந்தங்களையும் அருளினார். நீர் இளையாழ்வாருக்கு நாம் அருளிச்செய்த எல்லா ரஹஸ்யார்த்தங்களையும் அருளிச்செய்யும் என்று நியமித்தார். அவர் திருநாமத்தாலே தர்சனம் விளங்கப்போகிறது என்றும் ப்ரபன்ன குலமாகப் பேறுபெறும்படி உத்தாராகராகத் திருவவதரித்திருக்கிறார் என்றும் அருளிச்செய்தார்

திருக்கோட்டியூர் நம்பி தம் குமாரத்தி தேவகிப் பிராட்டியாரை உடையவர் திருவடிகளிலே ஆஸ்ரயிக்கச்சொன்னார். அப்போது உடையவர் அப்பெண்பிள்ளையை ஏகாந்தத்திலே அழைத்தருளித் தம் திருவடிகள் இரண்டையும் காட்டி பெண்ணே! இத்தையே தஞ்சமாக நினைத்திரு என்று அருளிச்செய்தார். அந்தப் பெண்ணும் மேவினேன் அவன் பொன்னடி மெய்ம்மையே (கண்ணிநுண் சிறுத்தாம்பு 2ஆம் பாசுரம்) என்று தேவரீர் எங்கே எழுந்தருளி இருந்தாலும் அடியேனுக்கு தேவரீருடைய திருவடிகளே தஞ்சம். தேவரீருக்கு ஆசார்யரான எங்கள் அய்யர் (திருத்தகப்பனார்) நினைத்திருக்கும்படி கண்டால் தேவரீருக்கு அந்நயார்ஹசேஷபூதையான அடியேன் நினைத்திருக்கச் சொல்லவும் வேணுமோ! என்று சொன்னாள் என பிள்ளை அருளிச் செய்வர்.

திருக்கோஷ்டியூர் நம்பி தம்முடைய அந்திமதசையிலே குமாரத்தியை அழைத்தருளி பெண்ணே! நம் ப்ரயாணத்தில் நீ நினைத்திருப்பது என்ன? என்று கேட்க அய்யரே (திருத்தகப்பனாரே) எங்கள் ஆசார்யரான எம்பெருமானாரோடு உண்டான சம்பந்தத்தாலே தேவரீருக்குப் பேறு முற்பட்ப் பெற்றதே என்று நினைத்திருக்கின்றேன் என்று சொல்ல அவரும் வளர்த்ததனால் பயன் பெற்றேன் என்று அப்பெண் பிள்ளையை அழைத்தருளி ஆளவந்தார் ப்ரசாதித்த பவிஷ்யதாசார்யர் விக்ரஹத்தை ப்ரசாதித்து உட்கருத்தையும் வெளியிட்டு எம்பெருமானார் திருவடிகளே சரணம் என்று சொல்லி திருநாட்டுக்கு எழுந்தருளினார்.

மேலே சொன்ன விஷயங்கள் புத்தூர் ஸ்வாமி வெளியிட்டுள்ள ஆசார்ய வைபவமஞ்ஜரி நூலில் இருந்து எடுக்கப்பட்டது.

## திருக்கோஷ்டியூர் நம்பி எம்பெருமானாருக்கு அருளிய 18 ரஹஸ்யங்கள்:

1)பங்காதுத் பத்திதே கீடம் கீடம்பங்க நபத்யதே
லோகாது பத்திதே ஜ்ஞாநி ஜ்ஞாநிலோகம் நபத்யதே

பிள்ளைப்பூச்சிக்கு பிறப்பிடம் புழுதியிலே ஆனாலும், அதற்கு அந்தப் புழுதி ஒட்டாது போலே, ஜ்ஞானிக்குப் பிறப்பிடம் லோகமேயானாலும் அவனுக்கு லோக வாசனை சேராதிருக்கும் என்கிறபடியே முமுசக்ஷுவுக்கு சம்சார பந்தம் நசிக்க வேண்டும்.

2) அக்நிர்வ் யாபகதீ பஞ்சதைத்யாம் கர்வவிவர்ஜயதே

இதற்கு விவரணம் : அக்னியிலே பிறந்த விளக்கானது சீதளமான காற்றினாலே அலருமாபோலே (காற்று அடித்தால் விளக்கின் ஒளி ஆடுமாபோலே)

சாத்வீகம் தலையெடுக்க, அஹங்கார, மமகாரங்கள் நிவ்ருத்தியாகும் என்கிறபடியே

சம்சார பந்தம் நசித்தால் ஒழிய அஹங்கார, மமகாரங்கள் நிவ்ருத்தியாக மாட்டா.

3) அஹங்கார, மமகாரங்கள் நிவ்ருத்தியானால் ஒழிய தேஹாபிமானம் போகாது.

4) தேஹாபிமானம் போனால் ஒழிய ஆத்ம ஜ்ஞானம் பிறக்கமாட்டாது.

5) ஆத்ம ஜ்ஞானம் பிறந்தால் ஒழிய ஐஸ்வர்ய போகாதிகள் இடத்திலே உபேசைஷ பிறக்கமாட்டாது.

6) ஐஸ்வர்ய போகாதிகள் இடத்திலே உபேசைஷ பிறந்தால் ஒழிய பகவத் ப்ரேமம் பிறக்கமாட்டாது.

7) பகவத் பிரேமம் பிறந்தால் ஒழிய விஷயாந்தர ருசி விடாது.

8) விஷயாந்தர ருசி விட்டால் ஒழிய பாரதந்திரியம் விடாது.

9) பாரதந்திரியம் பிறந்தால் ஒழிய அர்த்த, காம, ராக த்வேஷாதிகள் ஒழியா.

10) ராக த்வேஷாதிகள் ஒழிந்தால் ஒழிய, ஶ்ரீவைஷ்ணவத்வம் கை கூடாது.

11) ஶ்ரீவைஷ்ணவத்வம் கை கூடினால் ஒழிய, சாத்வீக பரிக்ரஹம் பிறக்கமாட்டாது.

12) சாத்வீக பரிக்ரஹம் பிறந்தால் ஒழிய, பாகவத பரிக்ரஹம் பிறக்கமாட்டாது.

13) பாகவத பரிக்ரஹம் பிறந்தால் ஒழிய, பகவத் பரிக்ரஹம் பிறக்கமாட்டாது.

14) பகவத் பரிக்ரஹம் பிறந்தால் ஒழிய, அனன்யப் பிரயோசனன் ஆகமாட்டான்.

15) அனன்யப் பிரயோசனன் ஆகாதே, அனன்யார்ஹ சேஷபூதனாக மாட்டான்.

16) அனன்யார்ஹ சேஷபூதனாகாதே, அனன்ய சரணனாக மாட்டான்.

17) அனன்ய சரணனாகதே, அதிகாரி புருஷனாக மாட்டான்.

18) அதிகாரி புருஷனானவனுக்கே, திருமந்த்ரார்த்தம் கை கூடும்.

மேலே குறிப்பிட்டுள்ள விசஷயங்கள் இளையாழ்வார் வைபவம் என்ற கட்டுரையிலிலுருந்து எடுக்கப்பட்டது. இதை தொகுத்து எழுதியவர் ஶ்ரீ.உ.வே T.ஆராவமுதன் ஸ்வாமி, கோட்டை, ஈரோடு.

திருக்கோட்டியூர் நம்பி திருவடிகளே சரணம்.

வாசிக தோஷ: சஷந்தவ்ய: